# பொதுக்காலம் 30ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

முழு இதயத்தோடு இறைவனிடம் அன்பு செலுத்த இன்றைய பொதுக்காலம் 30ஆம் ஞாயிறு திருப்பலி கொண்டாட்டத்திற்கு அன்புடனே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

அன்பே அனைத்திற்கும் முதன்மையானது என்றும் அகிலம் அனைத்தும் அன்பாலே கட்டப்பட வேண்டும் என்றும் அழைக்கிறார் இறைமகன். விவிலிய வார்த்தைகள் அனைத்தும் ‘அன்பு’ என்பதிலேயே அடங்கியுள்ளது. இறைவன் மீது உள்ள அன்பு, பிற மனிதர் மேல் காட்டும் அன்பு இவ்விரண்டும் உள்ளத்தில் இருந்தால் உலகமே மகிழ்வுறும்.

இன்றைய முதல் வாசகத்தில், கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளை விடுதலைப்பயண நூல் எடுத்துரைக்கிறது. “அன்னியனுக்கு தொல்லை கொடுக்காதே! விதவை, அனாதை யாருக்கும் தீங்கிழைக்காதே!” என்று உரைக்கப்படுகிறது. நல்மனத்தோடு வாழவும், கொடுப்பதில் தான் மகிழ்ச்சி என்பதை அறிந்து கொள்ளவும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இன்றைய நற்செய்தியில், அன்பால் உருவாக்கப்பட்ட இரு முதன்மையான கட்டளைகளை அன்பே உருவான இறைவன் எடுத்துரைக்கிறார். இரு கட்டளைகளையும் அதன் பொருளையும் நாம் நன்கு அறிந்து கொண்டிருக்கிறோம். செயல்படுத்துவதில்தான் சற்றே கடினப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு.”

அன்பு இல்லாதவர் எல்லாம் என்னுடையது என்பர். அன்புடையவர் தங்கள் உடலையும் பிறருக்குரியது என்பர் என்பது இக்குறளின் பொருள்.

உடலில் உயிர் எவ்வளவு அவசியமோ அதுபோல் உள்ளத்தில் அன்பு அவசியம். தன்னைப்போல் பிறரையும் நேசிப்போம். தூயவராம் கடவுள் நம்மை நேசிப்பார். இச்சிந்தனைகளை மனதில் தாங்கி இப்பலியில் இணைவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பே உருவான இறைவா!

எம் திரு அவையை வழிநடத்த நீர் தேர்ந்து கொண்ட திரு அவைத் தலைவர், திரு அவைப் பணியாளர்கள், அன்புப் பாதையில் நடந்து, அன்பின் நற்செய்தியை வாழ்வாக்கவும், இறைமக்களோடு அன்புறவைப் பேணி, வழிநடத்த வல்லமை அருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆற்றலாகிய ஆண்டவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், நேரிய வழியில் நடக்கவும், அன்போடு கூடிய அதிகாரங்களைச் செயல்படுத்தவும், தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பதவி எனும் ஆற்றலை, சரியான வழியில் செயல்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, மக்களை வளமான பாதையில் வழிநடத்த தேவையான நல்லறிவு தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தன்னைப் போல் பிறரை நேசிக்க அழைப்பவரே எம் இறைவா!

அனைவரையும் அன்பு செய்த உம் மக்களாகிய நாங்கள், எங்கள் சகோதர சகோதரிகளை அன்பு செய்து வாழவும், பயம், சோர்வு, தனிமை என தவிக்கும் மக்களுக்கு எங்கள் நேரங்களைச் செலவழித்து, அன்புப் பணியில் எம்மை ஈடுபடுத்த வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பின் மழையைப் பொழிபவரே எம் இறைவா!

எம் பகுதியில் தாமதமாகும் பருவ மழை போதிய அளவு பெய்து, முதன்மை தொழிலாகிய வேளாண்மை சிறக்கவும், குடும்பங்களில் அமைதி, மகிழ்ச்சி நிறையவும், படிக்கும் மாணவர்களின் எதிர்காலக் குழப்பங்கள் தீரவும், வேலைவாய்ப்புக்காக காத்திருப்போர் உமதருளால் பெற்றுக் கொள்ளவும், திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் நிறைவாய் ஆசீர்வதிக்கப்பட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com